செ.வெ.எண்: 55 நாள்:24.08.2018

**கரூர் மாவட்டம்**

**விலையில்லா வெள்ளாடுகள் மற்றும் செம்மறியாடுகள் வழங்கும் திட்டம் அக்டோபர் 2018 திங்களில் நடத்தப்படவுள்ளது – மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 15.09.2011 அன்று தொடங்கப்பட்ட விலையில்லா வெள்ளாடுகள் மற்றும் செம்மறியாடுகள் வழங்கும் திட்டத்தில் தமிழகத்தில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள பெண்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதற்காக விலையில்லா ஆடுகள் வழங்கப்பட்டு வருகிறது.

நடப்பு 2018-2019ம் நிதியாண்டில் கரூர் மாவட்டத்தில் அரசு ஆணைப்படி 10 ஊராட்களில் வருகின்ற அக்டோபர் 2018 மாதத்தில் இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. அரவக்குறிச்சி ஒன்றியம் - கொடையூர், லிங்கமநாயக்கன்பட்டி, க.பரமத்தி ஒன்றியம் - கூடலூர் கிழக்கு, கூடலூர் மேற்கு, கடவூர் ஒன்றியம் - கீழப்பகுதி, கரூர் ஒன்றியம் - கொசூர், குளித்தலை ஒன்றியம் - குமாரமங்கலம், தாந்தோணி ஒன்றியம் - காக்காவாடி, தோகைமலை ஒன்றியம் - கல்லை ஆகிய பத்து ஊராட்சிகளில் வருகின்ற 27.08.2018 அன்று சிறப்பு கிராம சபா நடத்தப்பட்டு, விண்ணப்பங்கள் பெறப்படும்.

கிராம அளவிலான தேர்வுக் குழுவினரால் விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்பட்டு இரண்டாவது கிராம சபா 03.09.2018 அன்று நடத்தப்பட்டு பயனாளிகள் பட்டியல் கிராம சபாவில் ஒப்புதல் பெறப்படும். இறுதி பயனாளி பட்டியல் மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் ஒப்புதல் பெறப்பட்டு, திட்டம் செயல்படுத்தப்படும்.

இத்திட்டத்தில் பயன்பெற, பெண்கள் மட்டுமே தேர்வு செய்யப்படுவர். விவசாய நிலம் இருத்தல் கூடாது, சம்பந்தப்பட்ட கிராமத்தில் நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும், 18 முதல் 60 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும், தற்சமயம் கால்நடைகள் ஏதும் இருத்தல் கூடாது, குடும்ப உறுப்பினர்கள் எவரும் மத்திய மாநில அரசுப் பணியில் இருத்தல் கூடாது, வழங்கப்படவுள்ள ஆடுகள் இரண்டு ஆண்டுகளுக்கு பராமரித்தல் வேண்டும் போன்ற விதிமுறைகள் பின்பற்றப்படும்.

குறைந்தபட்சம் 30 சதவிகிதம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்பை சார்ந்தவர்களாக தேர்வு செய்யப்படுவர்.

பொதுமக்கள் மேற்படி கிராமங்களில் நடைபெறும் கிராம சபாவில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

**வெளியீடு:**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**
**கரூர்.**